## SECTION A

**Q1.** பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றிக் குறிப்பு வரைக. *10*

(b) தமிழுக்கு வந்துள்ள பிற மொழிச் சொற்கள் குறித்து எழுதுக. *10*

(c) தமிழ்ப் பெயர்ச் சொற்களின் இயல்புகள் பற்றி எழுதுக. *10*

(d) சங்க ஆற்றுப்படை இலக்கியங்களை அறிமுகம் செய்க. *10*

(e) சமயக் குரவர் நால்வரின் பணிகள் குறித்து எழுதுக. *10*

**Q2.** (a) பல்லவர் காலத்தில் தமிழ் மொழி அடைந்த மாற்றங்கள் சிலவற்றைச் சுட்டுக. *15*

(b) தொல்காப்பியத் திணைப்பாகுபாடுகள் குறித்து எழுதுக. *20*

(c) தமிழ்ப் பக்தி இலக்கியத்திற்கு ஆழ்வார்களின் பங்களிப்பை விவரிக்க. *15*

**Q3.** (a) தமிழில் வழங்கும் சமூக வழக்குச் சொற்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. *20*

(b) நிலையாமைக் கருத்தைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்தும் பாங்கை விளக்குக. *15*

(c) தமிழ்ப் பெண் கவிஞர்களின் புதுக்கவிதைகள் குறித்து எழுதுக. *15*

**Q4.** (a) சிலப்பதிகாரமும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களும் என்பது குறித்து எழுதுக. *15*

(b) சங்க இலக்கியம் “சமயச் சார்புடையதல்ல” என்பதை நிறுவுக. *15*

(c) தமிழ்ப் புனை கதைகளில் பேச்சு வழக்குப் பயன்பாடு என்பது பற்றி எழுதுக. *20*

## SECTION B

**Q5.** பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) திறனாய்வின் பயன்கள் குறித்து எழுதுக. *10*

(b) 'இலக்கியத்தின் முக்கியமான கூறு - கற்பனை.' குறிப்பு வரைக. *10*

(c) அங்கதம் பற்றிய தொல்காப்பியரின் கருத்துகளை எடுத்துரைக்க. *10*

(d) பழமொழிகளின் இயல்புகள், தன்கமைகளை விளக்குக. *10*

(e) நாயக்கர் கால இலக்கிய வகைமைகள் குறித்து எழுதுக. *10*

**Q6.** (a) 'சமுதாயவியல் திறனாய்பு உள்ளடக்கத்தில் கவனம் செலுத்துகிறது' - என்ற கூற்றை ஆய்க. *20*

(b) தமிழ் நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள் குறித்து எழுதுக. *15*

(c) தொல்காப்பியப் புறத்திணையியல் சுட்டும் போர்முறைகள் பற்றி எழுதுக. *15*

**Q7.** (a) இரண்மையியல் நோக்கில் எழுதிய தமிழ் எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் அறிமுகப் படுத்துக. *15*

(b) 'அச்சிதழ்களும் மின்னிதழ்களும்' - என்பது குறித்து எழுதுக. *20*

(c) ஆங்கிலேயர் காலத் தமிழகத்தில் நிகழ்ந்த சமயமறுமலர்ச்சி குறித்து எழுதுக. *15*

**Q8.** (a) 'படைப்பிலக்கியம் போன்று மொழிபெயர்ப்பு ஒரு கலை' - என்ற கூற்றை ஆய்க. *20*

(b) கதைப்பாடல்கள் தமிழ்ச் சமூகத்தையும் வரலாற்றையும் வெளிப்படுத்தும் பாங்கை விளக்குக. *15*

(c) தேசிய இயக்கம் சார்ந்து இயங்கிய தமிழ் இதழ்கள் பற்றி எழுதுக. *15*